**தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 41ஆ ஆம் உறுப்புரையின் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் தற்போதுள்ள வெற்றிடத்தையும் வரவிருக்கும் வெற்றிடங்களையும் நிரப்புவதற்கும் ஆர்வமுள்ள தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அரசியலமைப்பின் பிரிவு 156 ஆ இன் கீழ், ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்கள் பெறுகை, கணக்கியல், சட்டம் அல்லது பொது நிர்வாகத்தில் எண்பிக்கப்பட்ட அனுபவத்தை உடைய நபர்களாக இருக்க வேண்டும்.

www.parliament.lk எனும் இலங்கைப் பாராளுமன்ற இணையத்தளத்தில் *'தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்'* என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள்;

> **அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்**
> **அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்**
> **இலங்கைப் பாராளுமன்றம்**
> **ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே**

எனும் முகவரிக்கு, **2026 பெப்ரவரி 20 ஆம்** திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அல்லது மின்னஞ்சலின் விடயமாக 'தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்' எனக் குறிப்பிடவும்

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்**
**அரசியலமைப்புப் பேரவை அலுவலகம்**
**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.**
2026.02.05